# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.98/2018 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 06 ( PW– 06 ) |
| **பெயர்** | :– | அழகிரிசாமி |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் வாட்டாட்சியராக பணிபுரிந்து 2024-ஆம் ஆண்டு ஓய்வுபெற்று சேலத்தில் வசித்துவருகிறேன். 27.03.2013-ஆம் நாள்முதல் 10.02.2014-ஆம் நாள்வரை ஓமலூர் வருவாய் வட்டத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்தேன். எதிரிகளை எனக்குத் தெரியாது. எங்கள் வட்டத்தில் புலியம்பட்டி என்ற ஊர் உள்ளது. அந்த ஊர் புல எண் 52 அரசு புறம்போக்கு நிலம் ஆகும். அதன் பரப்பளவு 2.38.00 ஹெக்டேர் ஆகும். ஓமலூர் காவல் ஆய்வாளர் இதுச் சம்மந்தமாக சான்று கேட்டார் நான் கொடுத்தேன். மேற்சொன்ன புல சம்மந்தப்பட்ட அடங்கல் கணக்கு **அ.சா.ஆ-05** ஆகவும் புல படம் **அ.சா.ஆ-06** ஆகவும் ஆ பதிவேடு **அ.சா.ஆ-07** ஆகவும் நான் கொடுத்த அறிக்கை **அ.சா.ஆ-08** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை**

ஆய்வாளர் அந்த புல எண்ணை குறிப்பிட்டு கேட்டதால் நான் மேற் -சொன்ன ஆவணங்களை கொடுத்தேன். புறம்போக்கு என்பதில் பல வகைபாடு உள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த சான்றிதழில் அரசு புறம்போக்கு என்று மட்டும்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் அருகில் இருந்த நிலங்கள் என்ன வகைப்பாட்டில் உள்ளன எந்த ஊரை சேர்ந்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.